CC 34/2020 PW-1 (நாகஜோதி) தேதி:14.07.2022

<u>எதிரி தரப்பில் கு.வி</u>

விபத்து நடந்த அன்று இரு சக்கர வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் 3 பேர் சென்றோம். நான், சதீஸ்குமார், காளியம்மாள் ஆகியோர் சென்றோம். விபத்து நடந்த இடம் மெயின் ரோடு என்றால் சரிதான். எங்கள் கிராமத்திற்கு செல்லும் ரோடும், மெயின் ரோடும் முட்டும் இடம் என்றால் சரிதான். நாங்கள் ரோட்டில் இருந்து மேலே ஏறும் போது மெயில் ரோட்டில் வந்த வாகனம் மோதிவிட்டது அது எந்த வாகனம் யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றி விவரங்களை என்னிடம் யார் கூறினார்கள் என்றால் போலீசார் கூறினார்கள் என்றால் சரிதான்.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)
நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

CC 34/2020 PW-2(காளியம்மாள்) தேதி:14.07.2022

எதிரி தரப்பில் கு.வி

விபத்து நடந்த அன்று இரு சக்கர வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் 3 பேர் சென்றோம். நான், சதீஸ்குமார், காளியம்மாள் ஆகியோர் சென்றோம். விபத்து நடந்த இடம் மெயின் ரோடு என்றால் சரிதான். எங்கள் கிராமத்திற்கு செல்லும் ரோடும், மெயின் ரோடும் முட்டும் இடம் என்றால் சரிதான். நாங்கள் ரோட்டில் இருந்து மேலே ஏறும் போது மெயில் ரோட்டில் வந்த வாகனம் மோதிவிட்டது அது எந்த வாகனம் யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றி விவரங்களை என்னிடம் யார் கூறினார்கள் என்றால் போலீசார் கூறினார்கள் என்றால் சரிதான்.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)
நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்

CC 34/2020 PW-3(முருகேசன்) தேதி:14.07.2022

<u>எதிரி தரப்பில் கு.வி</u>

விபத்து நடந்த இடம் ஒரு மெயின் ரோடு என்றால் சரிதான். எங்கள் ஊர் ரோடும் மெயின் ரோடும் சேரும் இடத்தில் விபத்து நடந்தது என்றால் சரிதான். பொதுவாக கிராமசாலையில் இருந்து மெயின் ரோட்டிற்கு செல்லும்போது நின்று மெயின் ரோட்டில் எதாவது வண்டி வருகிறதா என்று பார்த்து செல்லுவோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று அந்த வாகனத்தில் எத்தனைபேர் போனார்கள் என்றால் 3 பேர் போனார்கள். அவர்களின் பெயர் விவரம் தெரியுமா என்றால் தெரியும். சதீஸ்குமார், நாகஜோதி, காளியம்மாள் ஆகியோர்கள் சென்றார்கள். அவர்கள் என் உறவினர்கள் என்றால்இல்லை ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள். விபத்து எந்த பகுதியில் நடந்தது என்றால் ரோட்டின் மேற்கு பக்கத்தில் இடது புறமாக நடந்தது. சம்பவம் நடக்கும்போது நான் அங்கிருந்தேனா என்றால் இல்லை. ஆம்புலன்சில் அவர்களை ஏற்றும்போது நான் அங்கு வந்தேன். சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் பின்னர் தான் நான் அங்கு வந்தேன். சம்பவம் நடக்கு இடத்தில் சுமார் 20 பேர் இருந்திருப்பார்கள் என்றால் இருந்திருப்பார்கள். விபத்து எவ்வாறு நடந்தது என்றும் யார் யார் வாகனத்தை ஒட்டிவந்தார்கள் என்று தெரியாது என்றும் விபத்துக்குள்ளானவர்கள் என் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் இங்கு வந்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)
நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்